முதலமைச்சர் கழக தலைவரின் மகத்தான திட்டத்தில் ஒன்றான "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" திட்டத்தை இழிவுபடுத்தி பேசிய பா.ஜ.க. நிர்வாகி நடிகை குஷ்புவின் பேச்சுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி தலைமையில் மகளிர் அணி அமைப்பாளர்கள் கவிதா மோகன்தாஸ்,முத்துலட்சுமி ஏற்பாட்டில் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் நகர பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு குஷ்புவின் உருவ பொம்மையை எரித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்பாட்டத்தில்,நகர செயலாளர் நாட்டான் மாது,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,கைம்பெண் நல வாரிய உறுப்பினர் ரேணுகா தேவி,மற்றும் 200 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பி.ஜே.பி. நிர்வாகி குஷ்புவை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி நகரச் செயலாளராக பணியாற்றி வரும் வி.பக்கிரிசாமி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக தான் வகித்து வந்த நகரச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **வீ.குருநாதன்**, (சி - 20, சுரங்க சாலை, வட்டம்-24, நெய்வேலி டவுன்ஷிப், கடலூர் மாவட்டம்.) அவர்கள் நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி 14.03.2024 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் இரண்டரை ஆண்டு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து, பேசினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தா.முஹம்மது குதுரத்துல்லா, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திருமதி.செ.கலைமாமணி உட்பட பலர் உள்ளனர்.

## 4 சதவிகித அகவிலைப்படி உயர்வு:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அரசு அலுவலர் சங்கங்கள் நன்றி!

## தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தெரிவித்தனர் !




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.3.2024) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 4 சதவீத அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநிலமையச் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அனைத்துப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் (தியோடர்), தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழில்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்றபட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், டாக்டர் இராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

**சென்னை, மார்ச் 16-**

**அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நான்கு சதவீத அகவிலைப்படி உயர்த்தி அறிவித்ததற்கு பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 12.3.2024 அன்று அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 46 சதவீதமாக இருந்த அகவிலைப்படியை 1.1.2024 முதல் 50 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இந்த அகவிலைப்படி உயர்வால் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள். அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அகவிலைப்படி உயர்வை அறிவித்ததையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.3.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மையச் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அனைத்துப்

> **“இந்த அகவிலைப்படி உயர்வால் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள். அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.”**

பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் (தியோடர்), தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழில்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம்,

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், JSR தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி தொழிற் கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், டாக்டர் இராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த 4 சதவீத அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகிறார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2587.91 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ்

# ரூ.4181 கோடி மதிப்பீட்டில் 219 திட்டப் பணிகள்!

## தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, மார்ச் 16 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.3.2024) சென்னை, தங்க சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், வடசென்னை பகுதிக்கு விரிவான வளர்ச்சியை உறுதி செய்திடும் வகையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பள்ளிக்கல்வித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, காவல்துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மீன்வளத் துறை ஆகிய பதினோரு துறைகளை உள்ளடக்கி 4181.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகளை தொடங்கி வைக்கும் முதற்கட்டமாக 87 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். எஞ்சியுள்ள திட்டப் பணிகள் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். மேலும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்திற்கான இலச்சினையை வெளியிட்டார். முன்னதாக, வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டம்

சென்னை மாநகரத்தின் சில பகுதிகளில், குறிப்பாக வடசென்னையில் போதிய அளவு அடிப்படை வசதிகளும், கட்டமைப்புகளும் இல்லாத நிலை உள்ளது. சென்னை மாநகரில் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்ய “வடசென்னை வளர்ச்சித் திட்டம்” என்ற திட்டத்தை 1,000 கோடி ரூபாய் செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தில், கட்டமைப்பு பற்றாக்குறைகளையும் வளர்ச்சிக் குறியீடுகளின் குறைபாடுகளையும் கண்டறிந்து, அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2023 - 24ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

### வடசென்னை மேம்பாட்டிற்காகத் திட்டமிடப்பட்டுள்ள திட்டப்பணிகள்

சென்னை முழுவதும் ஒரே சீரான மற்றும் விரிவான வளர்ச்சியை உறுதிசெய்வதற்கான முயற்சியில், பதினோரு வெவ்வேறு துறைகளை உள்ளடக்கிய முக்கியமான திட்டப்பணிகளை செயல்படுத்துவதற்காக 4181.03 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடசென்னையின் சீரான வளர்ச்சிக்குத் தேவையான முக்கியத் திட்டங்களைக் கண்டறியும் நோக்கில், பல்வேறு துறையைச் சேர்ந்த பொறுப்பாளர்களுடன் இணைந்து, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் (CMDA) நடத்தப்பட்ட மிக நுட்பமான கணக்கெடுப்பிலிருந்து மாற்றத்திற்கான இந்த புதிய முயற்சி உருவானது.

வடசென்னை முழுவதும் 3800க்கும் மேற்பட்ட நபர்களிடமிருந்து, விரிவான வினாப்பட்டியல் கணக்கெடுப்பு வாயிலாக சேகரிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அப்பகுதிக்கு உடனடியாகத் தேவைப்படும் திட்டங்கள் கண்டறியப்பட்டன. இந்த கணக்கெடுப்பு முடிவுகள், அப்பகுதி குடியிருப்பாளர்கள் சந்திக்கும் பிரச்சனை களைக் கண்டறிய உதவியதுடன் அப்பகுதியின் உட்கட்டமைப்பு பற்றாக்குறை இடைவெளிகளை விரிவாக மதிப்பிடவும் உதவி புரிந்தன. தொடர்புடைய துறைகளுடன் கலந்தாய்வுகள், அதிகளவிலான பலன்களை ஏற்படுத்திட உத்திசார் நிதி ஒதுக்கீட்டை உறுதி செய்து, முன்னுரிமை அடிப்படையிலான திட்டப் பணிகள் தொகுக்கப்பட்டன.

இந்தத் திட்டப் பணிக்கான நிதியின் ஒரு பகுதியாக, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமானது, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்டங்களுக்கு 440.62 கோடி ரூபாயும், ஏனைய துறைகளின் திட்டங்களுக்கு 886.46 கோடி ரூபாயும் பங்களிக்கும். சம்பந்தப்பட்ட துறைகள், வாரியங்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் வாயிலாக எஞ்சியுள்ள நிதிகள் அடுத்த இரண்டாண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்படும்.

வட சென்னையின் முக்கிய இடங்களில் “வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்” கீழ் வளர்ச்சியின் ஒரு பகுதியாக திட்டமிடப்பட்ட முக்கிய திட்டங்களில், மாதிரி பள்ளிகளை மேம்படுத்துதல், ஏற்கத்தக்க விலையில் வீடுகள், திறன் மேம்பாட்டு மையத்தை உருவாக்குதல், புதிய பேருந்து முனையங்கள் மற்றும் பணி மனைகளை தரம் உயர்த்துதல் மற்றும் கட்டுமானம், முக்கிய பகுதிகளில் துணை மின்நிலையங்களை நிறுவுதல், போதைப்பொருள் மீட்பு மறுவாழ்வு மையம் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தை அமைத்தல், சிசிடிவி கேமராக்களை பொருத்துவதன் வாயிலாக பாதுகாப்பினை மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக உயர்தர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணி, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள், பொது பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், கடற்கரைகள், வணிக சந்தைகள், சலவையகம், குருதி சுத்திகரிப்பு மையங்கள் போன்ற உட்கட்டமைப்பு கட்டுமானங்களை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

### வட சென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகள் விவரம்

வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 1034.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 திட்டப்பணிகள், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 1071.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 86 திட்டப்பணிகள், சென்னைப் பெருநகர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் 946.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 49 திட்டப்பணிகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 440.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 திட்டப்பணிகள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 287.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23 திட்டப்பணிகள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 287.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

4 திட்டப்பணிகள், கல்வித் துறை சார்பில் 57.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2 திட்டப்பணிகள், காவல் துறை சார்பில் 28.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 6 திட்டப்பணிகள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 திட்டப்பணி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 2.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 திட்டப் பணிகள், மீன்வளத் துறை சார்பில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 திட்டப் பணி, என மொத்தம் 4181.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் வடசென்னையின் உட்கட்டமைப்பை மேம்படுத்தி, அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், பி. கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி. வி. கணேசன், மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மரு. கலாநிதி வீராசாமி, . இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். டி. சேகர், தாயகம் கவி, இ. பரந்தாமன், . ஜான் எபிநேசர், அ.வெற்றியழகன், . ஐட்ரீம் மூர்த்தி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், உயரதிகாரிகள் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், திருமதி காகர்லா உஷா, முனைவர் தா. கார்த்திகேயன், அன்சுல் மிஸ்ரா, அரசு துறைச் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவாரூர் நகரப்பகுதிகளில் பிடரி அம்மன் கோயில் குளம் ,ஏ.டி.பி. நகர் பூங்கா உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்டங்களை மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே.கலைவாணன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார். நகரமன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், நகர்மன்ற உறுப்பினர்கள் எஸ்.என்.அசோகன், வரதராஜன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் நாகை சட்டமன்றத் தொகுதி.திருமருகல் ஒன்றியம் திட்டச்சேரியில் கழக இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூலகத்தை நாகை மாவட்டக் கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் திறந்து வைத்தார். உடன் மாநில இளைஞரணி துணை செயலாளர் என்.இளையராஜா, திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ.செங்குட்டுவன், திட்டச்சேரி பேரூர் கழக செயலாளர் முகமது சுல்தான், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி மற்றும் பலர் உள்ளனர்.


‘திராவிட மாடல் ஆட்சியில்
முன்னேறும் திருப்பூர்’
திருப்பூர் மாவட்டத்திற்கு
ரூ.103 கோடி ரூபாய் மதிப்பிலான
திட்டங்களை அறிவித்த,
நல்லாட்சி நாயகர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு
திருப்பூர் மக்களின்
சார்பில் நெஞ்சார்ந்த
நன்றி! நன்றி! நன்றி!
கலைஞர் 100
1924 - 2023
திருப்பூர் மாவட்டத்திற்கான அறிவிப்புகள்:
ரூ.75 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் அமைக்கப்படும்.
ரூ 11.50 கோடி மதிப்பீட்டில் பெருமாநல்லூர் சாலையில், நல்லாற்றில் புதிய பாலங்கள் கட்டப்படும்.
ரூ.11.17 கோடி மதிப்பீட்டில் 13 புதிய சமுதாய நலக் கூடங்கள் கட்டப்படும்.
ரூ.4 கோடி மதிப்பீட்டில் பல்லடம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் எலும்பு முறிவு உட்பிரிவு சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்.
ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் கிராமப் பகுதிகளில் 8 புதிய அங்கன்வாடி மையக் கட்டிடங்கள் கட்டப்படும்.
வணங்கி மகிழும்,
திருப்பூர் க.செல்வராஜ் MLA.,
திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர்.
திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, இ. கருணாநிதி, திருமதி. எம். வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே .மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி.எம். வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே.மேகநாதரெட்டி,மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## இந்தியாவில் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத

# ஒரு அரசியல் வீரராக கலைஞர் திகழ்ந்தார்!

### செங்கல்பட்டில் – 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' வழங்கும் விழாவில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**செங்கல்பட்டு, மார்ச் 16 – இந்தியாவில் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத ஒரு அரசியல் வீரராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திகழ்ந்தார் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளுக்கு 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்' வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம், செங்கல்பட்டில் நடைபெற்றது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவில் கலந்துகொண்டு 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்' உபகரணங்களை வழங்கினார்.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய விளையாட்டு வளாகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினர். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி. எம். வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே.மேகநாதரெட்டி, விளையாட்டு வீரர் னுஷ், பாரா விளையாட்டு வீராங்கனை செல்வி. சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் இன்றைக்கு செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கி, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12 ஆயிரத்து 600 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்த `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' திட்டத்தை மதுரையில் கடந்த மாதம் தொடங்கி வைத்தோம்.

**அதிக ஸ்போர்ட்ஸ் கிட் கொடுக்கும் நிகழ்ச்சி!**

இதுவரை மதுரை, கோவை, திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த 1,274 கிராம ஊராட்சிகளுக்கு 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்'டை வழங்கி இருக்கிறோம். இன்று, இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, கிரிக்கெட், வாலிபால், ஃபுட்பால், சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட `கிட்'ஸை விளையாட்டு வீரர்களாகிய உங்களிடம் ஒப்படைக்கிறோம்.

இதுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகளிலேயே அதிக அளவிலான கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைக் கொடுக்கிற நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டமாக இருக்கட்டும், செங்கல்பட்டு மாவட்டமாக இருக்கட்டும், இரண்டு மாவட்டங்களுமே ஏராளமான விளையாட்டு வீரர்களை நம் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் கொடுத்திருக்கின்றன.

**சாதனை படைத்தவர்கள்!**

இந்த நிகழ்ச்சியில் கூட விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைத்த பல பேர் வந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த நீச்சல் வீரர் தனுஷ் அவர்கள் இங்கு வந்திருக்கிறார். சர்வதேச அளவிலான நீச்சல் போட்டிகளில் 5 முறை இந்தியாவுக்காகப் பங்கேற்று பல்வேறு பதக்கங்களை வென்றவர்தான் சகோதரர் தனுஷ் அவர்கள்.

நேபாளில் 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற 13-வது சவுத் ஏசியன் கேம்ஸில் இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற 9-வது ஏசியன் ஏஸ் குரூப் அக்வாடிக் சாம்பியன்ஷிப்பில் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றவர்.

சமீபத்தில் 'கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி' களை தமிழ்நாட்டில் நாம் நடத்திக் காட்டினோம். அந்தப் போட்டியில் 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என்று மொத்தமாக பதக்கப் பட்டியலில் 98 பதக்கங்களை வென்று, தமிழ்நாடு முதல் முறையாக இரண்டாவது இடத்தை அடைந்திருக்கிறது. இதிலும் தம்பி தனுஷ் அவர்கள் வெவ்வேறு பிரிவுகளில் 3 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் வென்று, சாதனை படைத்திருக்கிறார்.

தனுஷ் மாதிரியான துடிப்பான வீரர்களால்தான் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில், அடுத்த முறை தமிழ்நாடு நிச்சயம் முதல் இடத்தைப் பிடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது. கேலோ இந்தியா யுனிவர்சிட்டி கேம்ஸ்களிலும் 10 தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் வாங்கியிருக்கிறோம்.

2009-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சார்பாக, சப் ஜூனியர், ஜூனியர், சீனியர் ஸ்விம்மிங் சேம்பியன் போட்டிகளில் கலந்துகொண்டு இதுவரை 101 பதக்கங்களை வாங்கியிருக்கிறார் சகோதரர் தனுஷ் அவர்கள். இதுவரை மொத்தம் 402 பதக்கங்களைக் குவித்திருக்கிறார். 22 விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. 9 முறை தேசிய அளவிலான சாதனைகளைப் படைத்துள்ளார்.

**விளையாட்டுத் தலைநகராக உருவெடுக்கும்!**

தம்பி தனுஷ் மாதிரியான வீரர்களால் தமிழ்நாடு நிச்சயம் இந்தியாவின் விளையாட்டுத் துறை தலைநகராக உருவெடுக்கும் என்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. எல்லா தரப்பு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் வளர்ச்சிக்கு, நம் திராவிட மாடல் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை நிற்கிறார்கள்.

குறிப்பாக மாற்றுத்திறனாளி வீரர்களின் வெற்றிக்கு, நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்ந்து உறுதுணையாக இருந்து வருகிறது. அதற்கு ஓர் உதாரணமாகத்தான் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வீல் சேர் ஃபென்சிங் வீராங்கனை தங்கை சங்கீதா அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அவர் தனது முயற்சியால் கடந்த ஆண்டு ஒடிசா மற்றும் ஹரியானாவில் நடைபெற்ற நேஷனல் வீல் சேர் ஃபென்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார். அந்தத் தங்கைக்கு விளையாட்டு வீரர்களுக்கான மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலம் வணிகவரித்துறையில் இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளது.

அவருடைய குடும்பத்தில் அரசு வேலைக்குச் செல்லும் முதல் பெண், தங்கை சங்கீதா என்பதில் நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறோம், பெருமை அடைகிறோம். அவருடைய வெற்றிப் பயணம் கண்டிப்பாகத் தொடர வேண்டும். அதற்கு நம் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் எங்களுடைய துறையும் என்றைக்கும் அவருக்குத் துணை நிற்கும்.

இந்த இரண்டு பேரையும் அழைத்து நாம் இன்று கௌரவித்திருக்கிறோம் என்றால், இவர்கள் இரண்டு பேருமே இங்கு வந்திருக்கக் கூடிய அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக, ஒரு இன்ஸ்பிரேஷனாக உங்கள் முன் அமர்ந்து இருக்கிறார்கள்.

நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை எடுத்து வருகிற பல முயற்சிகளைப் பாராட்டி `கான்ஃபிடரேஷன் ஆஃப் இந்தியன் இண்டஸ்டரீஸ்' என்ற அமைப்பு நம் தமிழ்நாட்டிற்கு, நம் துறைக்கு 'பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்' என்ற விருதை சென்ற மாதம் அளித்தார்கள்.

அது மட்டுமல்ல, 'தி ஹிந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' என்ற புகழ் பெற்ற விளையாட்டுப் பத்திரிக்கை, 10 நாட்களுக்கு முன்பாக, 'பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரொமோஷன் ஆஃப் ஸ்போர்ட்ஸ்' என்ற விருதை நம் துறைக்கு நம் அரசுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

`தமிழ்நாடு சாம்பியன் ஃபவுண்டேஷன்' என்ற அறக்கட்டளையைத் தொடங்கி அதன் மூலம் ஏராளமான ஏழை, எளிய, மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறோம். இதுவரை 300-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு ரூபாய் 6 கோடி அளவுக்கு தமிழ்நாடு சாம்பியன் ஃபவுண்டேஷன் மூலமாக உதவிகளை வழங்கி இருக்கிறோம்.

**650 வீரர்கள், ரூ.16 கோடி ஊக்கத்தொகை!**

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நம் வீரர், வீரா ங்கனைகளுக்குத் தொடர்ந்து உயரிய ஊக்கத்தொகையையும் வழங்கி வருகிறோம். கடந்த வாரம் கிட்டத்தட்ட 650 விளையாட்டு வீரர்களுக்கு 16 கோடியே 24 லட்சம் ரூபாயை உயரிய ஊக்கத்தொகையாக வழங்கியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, கேலோ இந்தியா யூத் கேம்ஸ், ஏசியன் கப் ஹாக்கி டோர்னமெண்ட், ஸ்குவாஷ் வேர்ல்டு கப், வேர்ல்டு சர்ஃபிங் லீக், சைக்ளத்தான், சென்னை செஸ் மாஸ்டர்ஸ் 2023, சென்னை செஸ் ஒலிம்பியாட், நேஷனல் ஹாக்கி டோர்னமெண்ட் போன்றவற்றையும் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் நடத்தி வருகிறோம்.

விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் நின்றுவிடக் கூடாது. கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். கிராமங்களில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வரவேண்டும் என்ற அடிப்படையில்தான் இன்றைக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம்.

இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலைஞரின் பெயரில் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், விளையாட்டுத் துறையின் சார்பாக கலைஞர் பெயரில் ஒரு திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம் என்றால், அது இதுதான் முதல் முறை. அதுவும் கலைஞரின் நூற்றாண்டில் தொடங்கியிருக்கிறோம் என்பது எங்களுக்கு மிகப்பெரிய பெருமை.

**விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்!**

கலைஞர் அவர்களுக்கு அரசியல்வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் இப்படிப் பல முகங்கள் உண்டு. ஆனால், விளையாட்டுக்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு எதற்காக இந்தத் திட்டத்திற்கு அவர் பெயரை வைத்தீர்கள் என்று உங்களில் சில பேருக்கு சந்தேகம் இருக்கும். கலைஞர் அவர்கள் தன்னுடைய சிறுவயதிலேயே களத்தில் இறங்கி விளையாடியவர்தான்.

அதன் பிறகு அரசியலுக்கு வந்ததால், அவர் விளையாட்டில் கவனம் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், அவர் எப்போதும் விளையாட்டில் ஆர்வம் கொண்டிருந்தவர்தான். ஒரு விளையாட்டு வீரனுக்குத் தேவையான திறமைகள் என சிறப்பான ஆற்றல், கூர்மையான கவனம், தோல்வியிலும் துவண்டுவிடாத மனத்திடம், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் குழு முயற்சி என சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனை திறமைகளும் கலைஞர் அவர்களிடம் இருந்ததால்தான் இந்தத் திட்டத்திற்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' என்று பெயர் சூட்டினோம்.

**அரசியல்- சினிமா- இலக்கியம் மூன்றிலும் இயங்கியவர்!**

கலைஞரின் ஆற்றலுக்கு நிகரான ஆற்றலைக் கொண்ட இன்னொரு தலைவரை நீங்கள் பார்க்கவே முடியாது. இன்றைக்கு நான் சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு வருகிறேன், காஞ்சிபுரத்துக்கு வருகிறேன் என்றால், இவ்வளவு சாலை வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், எந்த வசதியும் இல்லாமல், எந்தச் சாலை வசதிகளும் இல்லாமல், 50 வருடத்திற்கு முன்பு தமிழ்நாடு முழுக்கப் பயணம் செய்து இந்த இயக்கத்தை வளர்த்தது, தமிழ்நாட்டைக் காத்தது, மக்கள்நலத் திட்டங்களைத் தீட்டியது என எல்லாவற்றையும் செய்தவர்தான் கலைஞர். ஒரே நேரத்தில் அரசியலிலும் சினிமாவிலும் இலக்கியத்திலும் இயங்கினாலும், எங்கெல்லாம் அவர் கால் வைத்தாரோ அங்கெல்லாம் கொடிகட்டிப் பறந்தவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதற்கு எந்த அளவுக்கு அவருக்கு ஆற்றல் இருந்திருக்க வேண்டும்? எந்த அளவுக்கு அவர் உழைத்திருக்க வேண்டும் என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர் எப்போது தூங்கப் போகிறார், எப்போது எழுந்திருக்கிறார், எப்போது `முரசொலி'க்குப் போகிறார், எப்போது கோட்டைக்குப் போகிறார், எப்போது அறிவாலயத்திற்குப் போகிறார் என்று தெரியாத அளவிற்கு உழைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞரிடம் கூரிய மதி இருந்தது. நாம் இன்று என்ன பேசினால், எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் என்ன பேசுவார்கள், அவர்களுக்கு நாம் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று அவருக்குத் தெளிவாகத் தெரியும். அந்த `ஷார்ப் மைண்ட்' ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும் மிக, மிக முக்கியம். நாம் இன்றைக்கு எப்படி ஆட வேண்டும். இதற்கு எதிரணியினர் எப்படி விளையாடுவார்கள். அதற்கு நாம் எப்படி சமாளித்து விளையாட வேண்டும் என்று கலைஞரைப் போல சிந்திக்க வேண்டும்.

அதேபோல் கலைஞரின் மனத்திடம். தோல்வியாக இருந்தாலும் சரி, வெற்றியாக இருந்தாலும் சரி, அவை இரண்டையுமே சமமாகப் பார்க்கக் கூடியவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தோல்வி அடைந்துவிட்டோம் என்று துவண்டு போனதோ, இல்லை வெற்றி பெற்றுவிட்டோம் என்று ஆணவத்தில் ஆடியதோ கலைஞரின் வாழ்க்கையில் எப்போதும் நடந்தது கிடையாது.

**வெற்றி நிச்சயம் நம்மைத் தேடி வரும்!**

தொடர்ந்து உழைத்துக்கொண்டே இருந்தால், வெற்றி நிச்சயம் நம்மைத் தேடி வரும் என்ற அந்த மனத்திடத்துடன் கடைசிவரை போராடியவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்த மன உறுதி இங்கு வந்திருக்கக்கூடிய அனைத்து விளையாட்டு வீரர்க ளுக்கும் இருக்க வேண்டும்.

அதேபோல் கலைஞரின் `டீம் வொர்க்'. `டீம் வொர்க்' சரியாக அமைந்துவிட்டது என்றாலே, பாதி வெற்றி அடைந்துவிட்டோம் என்று பொருள். அப்படிப்பட்ட ஒரு டீமை அவரே அமைத்துக் கொண்டார். நம் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களைப் போல, அந்த 'டீம்' தான், இன்று நம் முதலமைச்சர் அவர்களின் 'டீம்' ஆக இருக்கின்றனர். இது போன்ற ஒரு 'டீமை' நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படித் திறமையான வீரர்களுக்கு இருக்கவேண்டிய அனைத்துக் குணங்களும் திறமைகளும் கலைஞர் அவர்களிடம் இருந்தன. அதனால்தான் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத ஒரு அரசியல் வீரராக கலைஞர் அவர்கள் இந்தியாவில் உயர்ந்து நின்று கொண்டிருக்கிறார். அத்தகைய கலைஞர் அவர்களின் பெயரால் வழங்கப்படுகின்ற இந்த விளையாட்டு உபகரணங்களைப் பெறவுள்ள விளையாட்டு வீரர்களை நான் கேட்டுக்கொள்வது ஒன்றுதான்.

கலைஞரின் பெருமையைப் பேசுங்கள். கலைஞர் என்னென்ன திறமைகளைப் பெற்றிருந்தாரோ, அவற்றை நீங்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும். விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, நம் விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வெற்றி என்பது சுலபமாகக் கிடைக்காது. நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக தூரம் தாண்ட முடியும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

எனவே, விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல, நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள எந்தத் துறையாக இருந்தாலும் அந்தத் துறையில் நீங்கள் வெல்ல வேண்டும் என்றால், அதற்காக உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**அரசின் `பிராண்டு அம்பாசிடர்'கள்!**

இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பெற்ற செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த அத்தனை ஊராட்சிகள், அந்த ஊராட்சிகளின் முகங்களாக உள்ள மாணவர்கள், இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள் உங்கள் அத்தனைப் பேருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசின் முகமாக, முதலமைச்சரின் முகமாக, நம் அரசின் 'பிராண்டு அம்பாசிடர்'களாக இருப்பது, இங்கு வந்திருக்கும் விளையாட்டு வீரர்களாகிய நீங்கள்தான்.

நீங்கள் இந்தத் திட்டத்தை இன்னும் அதிகமாக உபயோகப்படுத்துங்கள். இந்தத் திட்டத்தை மக்களிடம் அதிகமாகக் கொண்டு சேருங்கள் என்று கூறிக்கொண்டு இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அமைச்சர் அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைக் கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

விழாவில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, சி.வி.எம்.பி.எழிலரசன், வரலட்சுமி மதுசூதனன், பாலாஜி, பனையூர் பாபு, மேயர்கள் வசந்தகுமாரி, மகாலட்சுமி யுவராஜ், துணை மேயர் காமராஜ்,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அருண்ராஜ், கலையரசி மோகன் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர்கள் படப்பை மனோகரன், செம்பருத்தி துர்கேஷ், நீச்சல் வீரர் தனுஷ், மாற்றுத்திறனாளி வாள் வீச்சு வீராங்கனை சங்கீதா உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



நேற்று (14.3.2024) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், சென்னைகன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் மூலம் நடைபெறும் சாலைப் பணிகள் குறித்த உயர்மட்டக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்ட இயக்குநர் ஆர்.செல்வராஜ், நிதித்துறை சிறப்பு செயலாளர் பிரசாந்த் வடநேரே, நிதித்துறை துணைச் செயலாளர் சிபி ஆதித்யா செந்தில்குமார், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் எம்.கே.செல்வம் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை தெற்கு மாவட்டம்
# மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!
### தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.கார்த்திகேயன்** (68, பன்னீர் செல்வம் வீதி தெற்கு, ஒத்தக்கால்மண்டபம், கோவை மாவட்டம் - 641 032) அவர்கள் ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



நாமக்கல் நகராட்சி பூங்கா சாலையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அமைக்கப்பட்டிருந்த எல்லோருக்கும் எல்லாம் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தே.ராம்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) த.வடிவேல், நாமக்கல் தெற்கு நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வரின் சீரிய நடவடிக்கைகளால் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்
# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு!
### அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு!



சென்னை, மார்ச் 16-

தமிழ்நாட்டிற்கு 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1,37,563 வெளி நாட்டு சுற்றுலா பயணிகளும் 2,81,96,899 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து சுற்றுலா ஆணையர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021-ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023-ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது. தற்போது 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1,37,563 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021-ல் 11,53,36,719-ஆக இருந்து 2022-ல் 21,85,84,846 ஆகவும், 2023-ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2,81,96,899 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். மேலும் சுற்றுலாத்துறைக்கு தொழில் அந்தஸ்தை வழங்கும் சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார். சாகச சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, கேரவன் சுற்றுலா, கிராமப்புற மற்றும் தோட்ட சுற்றுலா, கடலோர சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, MICE சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா மற்றும் திரைப்படச் சுற்றுலா ஆகிய 12 முன்னுரிமை சுற்றுலாப் பிரிவுகள் கண்டறியப்பட்டு சுற்றுலாத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக முக்கிய கவனம் செலுத்தும் அடிப்படையில் பொழுதுபோக்கு பூங்காக்கள், பாரம்பரிய ஹோட்டல்கள், அனுபவமிக்க ஒய்வு விடுதிகள், சுற்றுச்சூழல் குடிசைகள்/ முகாம்கள், ரோப்வேகள், ஆரோக்கிய ஓய்வு விடுதிகள், ஓசியானேரியம் / மீன்வளம், கோல்ஃப் மைதானம், தோட்டம் / பண்ணை சுற்றுலா திட்டங்கள், அருங்காட்சியகங்கள், சாகச சுற்றுலா திட்டம், குரூஸ் சுற்றுலா திட்டம் மற்றும் கேரவன் சுற்றுலா திட்டம் ஆகிய 13 தகுதியான சுற்றுலாத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தங்கள் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தொழில் வாய்ப்புகள் குறித்து, தங்கள் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தொழில் முனைவோர்களுக்கு தெரிவித்து புதிய சுற்றுலா தலங்களின் உருவாக்கத்திற்கும், மேம்பாட்டிற்கு பணியாற்றிட வேண்டும். சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார். இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை துணைச் செயலாளர் இரா.வீருசாமி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா, சுற்றுலாத்துறை இணை இயக்குநர் ப.புஷ்பராஜ் உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளை வஞ்சிக்கின்ற ஆட்சி நடத்துகிறார் பிரதமர் மோடி!
### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!



செஞ்சி, மார்ச் 16-

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியத்தில் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு அரசு கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழக துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்.

மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தியில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.11.97லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம், பகுதி நேர ரேஷன் கடை கட்டிடம், சமத்துவ குப்பம் ஊராட்சியில் ரூ 7.43லட்சம் மதிப்பீட்டில் புதிய சமையலறை கட்டிடம், கெங்காபுரம் ஊராட்சியில் ரூ.11.85 லட்சம் மதிப்பீட்டில் இயற்கை உள்ளீட்டு மைய கட்டிடம், காளான் வளர்ப்பு கட்டிடம், தேவந்திரவாடி ஊராட்சியில் ரூ. 28.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம், நொச்சலூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ 12.30 லட்சம்மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடங்கள் என மொத்தம் ரூ. 71 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணிநெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர்கள்நெடுஞ்செழியன், பெருமாள், விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் விஜயலட்சுமி ஜெயக்குமார், ராஜா, ஜெயா ராதா கிருஷ்ணன், அன்னபூரணி மணி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 71.77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கு இலவசமாக கேஸ் சிலிண்டரை வழங்கியது தி.மு.க. தலைமையிலான கலைஞர் ஆட்சியில் என்றும் 10ஆண்டு கால பி.ஜே.பி. ஆட்சியில் கேஸ் சிலிண்டரை மூன்று மடங்கு ஏற்றிவிட்டு தேர்தல் வரும் நேரத்தில் ரூபாய் நூறு என குறைத்து விட்டு பெட்ரோல் டீசல் விலையை ஏற்றி ஏழை எளிய மக்களை ஏமாற்றி நம்ப வைத்து மோசடி செய்கின்ற நம்பர் 1ஆக இருப்பவர் பிரதமர் மோடி என்றும் தமிழ்நாட்டு மக்களை பல்வேறு சமூக நலத் திட்டங்கள் மூலமாக காப்பாற்றுவதற்கு நம்பர் 1 முதல்வராக இருப்பவர் மு.க.ஸ்டாலின் எனத் தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆட்சி பொறுப்பேற்ற 33 மாதம் கால ஆட்சியில் விவசாயிகளுக்கு தாய் உள்ளத்தோடு 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு திட்டத்தை வழங்கியும்,விவசாய கடனை தள்ளுபடி செய்தும் பல்வேறு திட்டங்கள் மூலம் விவசாயிகளை பாதுகாக்கின்ற ஆட்சி மு. க. ஸ்டாலின் ஆட்சி என்றும் விவசாயிகளை வஞ்சிக்கின்ற ஆட்சி மோடி ஆட்சி என்றும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயண மூர்த்தி,சாந்தி சுப்ரமணியன்,ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், வேலு வட்டார கல்வி அலுவலர்வெங்கடேசன்,ஒன்றிய கவுன்சிலர்கள் சக்தி,ஒன்றிய நிர்வாகிகள் அர்ஷத், செல்வம், சரவணன், பாலமுருகன், செந்தில்குமார், உதயகுமார், ஆறுமுகம், ஜி.பி. எஸ். முருகன்,எஸ். பி. சம்பத், தோப்பு சம்பத், பெருவளூர் பாபு,அரங்கநாதன்,முன்னாள் கவுன்சிலர் ஜானகிராமன்,மாணவரணி ஆறுமுகம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம்
# ஊத்தங்கரை பேரூர்ச் செயலாளர் இரா.பாபு சிவக்குமார் மறைவு!
### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அஞ்சலி!



கிருஷ்ணகிரி, மார்ச் 16-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை பேரூர் கழகச் செயலாளர் இரா.பாபுசிவகுமார் நேற்று முன்தினம் (14.3.2024) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துறோம்.

செய்தியறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழகத்தினர் நேரில் சென்று மறைந்த இரா.பாபு சிவக்குமார் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர், கழக தலைவர் முதல்வர் ஆகியோருடன் கழகத்தில் பல்வேறு பணிகளை திறம்பட பணியாற்றிய பெருந்தகை.

ஆரம்ப காலத்தில் இருந்து கழகத்தில் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு கழகத்திற்காக பணியாற்றியவர். கடந்த காலங்களில் இளைஞர் அணியில் பணியாற்றி பெருமை சேர்த்தவர், ஒன்றிய பொருளாளராக பணியாற்றியவர்.

கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் 38 ஆண்டு காலமாக தொடர்ந்து ஊத்தங்கரை பேரூராட்சியின் பேரூர் கழக செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தவர். கடந்த 1986 ஆம் ஆண்டு ஊத்தங்கரை பேரூராட்சி தலைவராக பணியாற்றியவர்.

கடந்த 1998 ஆம் ஆண்டு தலைமை கழக பொதுக் குழு உறுப்பினராக பணியாற்றியவர். ஊத்தங்கரை நகர வங்கி தலைவராகவும், ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட அனைத்து போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு சிறை சென்றவர் ஆவார்.

இவருக்கு ஞானம்மாள் என்கிற மனைவியும், பா.சோமசுந்தரம், பா.தீபக் என்ற இரு மகன்களும் உள்ளனர்.

## ஊத்தங்கரை
# பேரூர்ச் செயலாளர் பாபு சிவகுமார் மறைவு!
### மாவட்டக் கழகம் இரங்கல்!

கிருஷ்ணகிரி, மார்ச் 16-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை பேரூர் கழக செயலாளர் மறைவையொட்டி.

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னாடி,

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர், கழகத் தலைவர், முதல்வர் தளபதி ஆகியோருடன் கழகத்தில் பல்வேறு பணிகளை திறம்பட பணியாற்றிய பெருந்தகை.

ஆரம்ப காலத்தில் இருந்து கழகத்தில் பணியாற்றியவர். கடந்த காலங்களில் இளைஞர் அணியில் பணியாற்றி பெருமை சேர்த்தவர், ஒன்றிய பொருளாளராக பணியாற்றியவர். கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் கடந்த 38 ஆண்டு காலமாக தொடர்ந்து ஊத்தங்கரை பேரூராட்சியின் பேரூர் கழக செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தவர்.

கடந்த 1986 ஆம் ஆண்டு ஊத்தங்கரை பேரூராட்சி தலைவராக பணியாற்றியவர். கடந்த 1998 ஆம் ஆண்டு தலைமை கழக பொதுக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

ஊத்தங்கரை நகர வங்கி தலைவராக பணியாற்றியவர். ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளராக பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட அனைத்து போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு சிறை சென்றவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவே முழு நேரம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு திறம்பட பணியாற்றிய பாபுசிவகுமார் நம்மையெல்லாம் விட்டு பிரிந்து சென்றுள்ளார் என்பதை பார்க்கும்போது மிகுந்த வருத்தம் அடைகிறேன். அவரது பிரிவால் வாடும் அவர்களது குடும்பத்தினருக்கும், ஊத்தங்கரை பகுதியின் கழகத் தோழர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.103 கோடியில் திட்டங்களை அறிவித்த
# முதலமைச்சருக்கு திருப்பூர் மக்களின் சார்பாக நன்றி!
### மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை!



திருப்பூர், மார்ச் 16-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து திருப்பூருக்கென 4ம் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம், 843 கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய தார் சாலைகள், முத்தமிழறிஞர் கலைஞர் மத்திய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

13.03.2024 அன்று கோவை மாவட்டம், பொள்ளாச்சிக்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.75 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் அமைக்கபடுமெனவும், ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் பெருமாநல்லூர் சாலையில் நல்லாற்றில் புதிய பாலங்கள் கட்டப்படுமெனவும், ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் கிராமப் பகுதிகளில் 8 புதிய அங்கன்வாடி மையக் கட்டிடங்கள் கட்டப்படுமெனவும், ரூ.11.17 கோடி மதிப்பீட்டில் 13 புதிய சமுதாய நலக் கூடங்கள், ரூ.4 கோடி மதிப்பீட்டில் பல்லடம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் எழும்பு முறிவு சிறப்பு மருத்துவமனை என ரூ.103 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களை அறிவித்துள்ளார். இதற்காக திருப்பூர் மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொது கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் எம் எல் ஏ சிறப்புரையாற்றினார்.உடன் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் புதுக்கோட்டை விஜயா | சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட கழக அவை தலைவர் கே.ஜி. சீனிவாசன் பொருளாளர் மகா. அலெக்ஸ்சாண்டர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என். ரவி, சீர்காழி நகர செயலாளர் மா.சுப்பராயன்மற்றும் மலர்விழி திருமாவளவன், எம்.பி. கென்னடி | காழி. கலைவாணன், துர்கா பரமேஸ்வரி ராஜசேகர் மற்றும் பலர் உள்ளனர்

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து
### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வீரவநல்லூர் பேரூரைச் சேர்ந்த எம்.அப்துல்ரகுமான் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



